**செய்தி வெளியீடு எண்: 115/2022** **நாள்: 29.12.2022**

**<u>சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்ட பணியில்</u>**

**<u>சிஎம்பிடி முதல் மாதவரம் வரை இருப்புப்பாதை அமைக்க ரூ.206.64 கோடி பணிக்கு ஒப்பந்தமானது</u>**

சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்ட பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இப்பணியில் வழித்தடம் 5-ல் சிஎம்பிடி முதல் மாதவரம் பால்பண்ணை வரையிலான 10.1 கி.மீ நீளத்திற்கு ரூ.206.64 கோடி மதிப்பில் இருப்புப்பாதை அமைக்கப்படவுள்ளதாகவும் இதற்காக JICA நிதியுதவியுடன் KEC-VNC-JV ஆகிய கட்டுமான நிறுவனங்களுடன் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகம் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-2-ல் வழித்தடம் 5-இல் 16 மெட்ரோ இரயில் நிலைய இருப்பு பாதைகளில் தண்டவாளங்கள் அமைப்பது மற்றும் அதன் தொடர்பான அனைத்து வகையான பணிகளும் இதில் அடங்கும்.

இதில் சிஎம்பிடி, அண்ணாநகர் கேவி மெட்ரோ, திருமங்கலம் சந்திப்பு மெட்ரோ, அண்ணா நகர் மேற்கு மெட்ரோ, ரெட்டேரி சந்திப்பு மெட்ரோ, சாஸ்திரி நகர் மெட்ரோ, மாதவரம் பேருந்து முனையம் மெட்ரோ, வேல்முருகன் நகர் மெட்ரோ, மஞ்சம்பாக்கம் மெட்ரோ மற்றும் அசிசி நகர் மெட்ரோ ஆகியவை உயர்மட்ட மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் வில்லிவாக்கம் எம்டிஎச் சாலை மெட்ரோ, வில்லிவாக்கம் பேருந்து முனையம் மெட்ரோ, வில்லிவாக்கம் மெட்ரோ, ஸ்ரீனிவாசா நகர் மெட்ரோ, கொளத்தூர் சந்திப்பு மெட்ரோ மற்றும் மாதவரம் பணிமனை மெட்ரோ ஆகியவை சுரங்கப்பாதை மெட்ரோ இரயில் நிலையங்கள்.

இந்நிலையங்கள் வழியாக செல்லும் இடங்களுக்கான 10.1 கி.மீ நீளத்திற்கு இருப்புப்பாதை மற்றும் இதர பணிகளுக்காக ரூ. 206.64 கோடி மதிப்பில் ஒப்பந்தம் கையெழுத்தானது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவன இயக்குநர் தி. அர்ச்சுனன் (திட்டங்கள்), தலைமை பொது மேலாளர்கள் எஸ். அசோக் குமார், (தடம் மற்றும் உயர்மட்ட கட்டுமானம்), லிவிங்ஸ்டோன் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு), ரேகா பிரகாஷ் (திட்ட வடிவமைப்பு), கூடுதல் பொது மேலாளர் குருநாத் ரெட்டி, (ஒப்பந்த கொள்முதல்) மற்றும் திருவாளர் KEC-VNC-JV நிறுவனத்தின் திட்ட மேலாளர் திரு. சிவகுரு மற்றும் இயக்குனர் திரு. பிரவீன் கோயல் மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் போது உடனிருந்தனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**